10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
Ethiroli
குரல் 01 அதிர்வு 160 செவ்வாய்க்கிழமை ஒக்ரோபர் 31 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## முதலமைச்சருக்கு எதிராக
# மீண்டும் சதி?

யாழ்ப்பாணம்,ஒக்.31

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றைக் கொண்டுவரும் முயற்சிகள் திரைமறைவில் நடப்பதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பான இரகசியக் கூட்டமொன்று நேற்றுத் திங்கட்கிழமை கொக்குவில் தலையாளிப் பகுதியிலுள்ள விடுதியொன்றில் நடைபெற்றுள்ளது.

கடந்தமுறை முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவரவேண்டும் என விடாப்பிடியாக நின்ற மாகாணசபை உறுப்பினர்கள் மூவரே, மீண்டும் முதலமைச்சரைக் கவிழ்க்க முயன்று வருவதாகவும், தமது சகாக்கள் சிலருடன் கொக்குவிலில் உள்ள் விடுதியில் இது தொடர்பாக அவர்கள் திட்டமிட்டதாகவும் கூறப்படுகின்றது. ஆயினும் ஏனைய மாகாணசபை உறுப்பினர்கள் இந்தத்திட்டத்துக்கு உடன்படாததால், உடனடியாக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியாதெனவும், குறிப்பிட்ட கால அவகாசத்தின் பின்னரே ஏதேனும் புதிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து, வெற்றியடைச் செய்ய முடியும் எனவும் நேற்றைய கூட்டத்தில் அவர்கள் ஆலோசித்ததாகச் சொல்லப்படுகின்றது. (அ)

# மீறுகிறார் சம்பந்தன் சீறுகிறார் சிவசக்தி

வவுனியா, ஒக்.31

"எதிர்க்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் எனது நாடாளுமன்றச் சிறப்புரிமையை மீறுகிறார். எனவே இது குறித்து சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளேன்" என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

நாடாளுமன்றத்தில் புதிய அரசியல் யாப்பிற்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை மீதான விவாதம் நேற்று 30 முதல் நவம்பர் முதலாம் திகதிவரை 3 நாட்கள் நடைபெறுகிறது. இதில் கலந்து கொண்டு தனது கருத்தைத் தெரிவிப்பதற்குத் தனக்கு நேரம் ஒதுக்கித்தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் எதிர்க்கட்சித் தலைவரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இருப்பினும் உங்களுக்கான நேர ஒதுக்கீடு குறித்து நாடாளுமன்றக் குழுவில்தான்

06

# புளொட் பிரியாது!



யாழ்ப்பாணம், ஒக்.31

ஒருபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து நாங்கள் வெளியேற மாட்டோம். அப்படியான எண்ணமெதுவும் எங்களுக்கில்லை" என்று தெரிவித்துள்ளார் புளொட் அமைப்பின் முக்கியஸ்தரும், வடமாகாண விவசாய அமைச்சருமான க.சிவநேசன்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் -தமிழரசுக் கட்சி தவிர்ந்த- ஏனைய கட்சிகள் விரைவில் தனியாக ஒரு கூட்டணை அமைக்கவுள்ளதாக வெளிவரும் தகவல்கள்

06

★ அரசியலமைப்புக்கு ஆதரவு
★ பௌத்தத்துக்கு முன்னுரிமை

# சுமந்திரன் நேற்று அரசுக்குத் தாளம்



கொழும்பு, ஒக்.31

"அரசியல் யாப்புப் பேரவை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெரும்பாலான ஆலோசனைகளுக்கு தமிழ்க் கட்சிகள் உடன்பட்டுள்ளன. அத்துடன் பௌத்த மதத்துக்கு முக்கிய இடத்தை வழங்குவது தொடர்பிலும் எமக்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை" என்று அரசியல் யாப்பின் நடவடிக்கைக் குழுவின் அறிக்கை மீதான விவாதத்தின்போது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தினால் நியமிக்கப்பட்ட அரசியல் யாப்பு பேரவை நடவடிக்கை சபையின் இடைக்கால அறிக்கை மீதான விவாதம் நேற்றுக் காலை ஆரம்பமானது.

" தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் இந்த ஆலோசனைகளுக்கு உடன்பாடு தெரிவித்துள்ளன. இதில் பெரும்பாலான ஆலோசனைகள் மற்றும் தேசியப் பிரச்சினைகள் தொடர்பில் உடன்பாட்டுக்கு வருவதில் சிரமங்கள் இருக்கவே

06

## கைதிகளுக்காக பல்கலை வாசல்கள்
# பூட்டு!
## முடங்கியது நிர்வாகம்

யாழ்ப்பாணம், ஒக்.31

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் மாணவர்களின் போராட்டத்தின் அடுத்த கட்டமாக, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சகல நடவடிக்கைகளையும் முடக்கும் வகையில் அனைத்து நுழைவாயில்களும் நேற்றுமுதல் மூடப்பட்டது.

யாழ்.பல்கலைகழகம் முன்பாக கொட்டும் மழைக்கு மத்தியிலும் நேற்றுக் காலை கூடிய மாணவர்களும், பல்கலைக்கழக சமூகத்தினரும் பல்கலைக் கழக வாயில்களை மூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாடுகள் அனைத்தையும் முடக்கும் நோக்கிலேயே வாசல்

06

# யாழ். நீதிபதிகளுக்கு மகாநாயக்கர் விருது



கொழும்பு, ஒக்.31

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியனையும், சாவகச்சேரி மாவட்ட நீதவான் திருமதி ஸ்ரீ நிதி நந்தசேகரனையும் உலக பௌத்த இளையோர் சங்க சபை கௌரவித்துள்ளது.

நியாயத்தை நிலை நாட்டுவதற்காக இவர்கள் இருவரும் ஆற்றிய சேவையைப் பாராட்டியே உலக பௌத்த இளையோர் சங்க சபை இவர்களை இவ்

06

# டக்ளஸ் கொலை முயற்சி: 6 பேருக்கு கடூழியச் சிறை
## எமில் காந்தன் உட்பட 9 பேர் விடுதலை



கொழும்பு, ஒக்.31

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், முன்னாள் அமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவைத் தாக்கி கொலை செய்ய முயன்ற

06

# அவர்களை மன்னிக்குக!
## டக்ளஸ்

யாழ்ப்பாணம்,ஒக்.31

களுத்துறைச் சிறைச்சாலையில் என் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தில், குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் . இதுவே என் நிலைப்பாடு என்று

06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுத் தற்கொலை தென்னிலங்கையிலும் அதிர்வு

கொழும்பு, ஒக்.31

பண கொடுக்கல் வாங்கல்களில் வந்த ஏமாற்றம் காரணமாக ஒரு குடும்பமே உயிரிழந்த சம்பவம் ஒட்டு மொத்த இலங்கையையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்நிலையில் தாயின் மூலம் விஷம் கொடுக்கப்பட்டு உயிரிழந்த குழந்தைகளிடம் இலங்கை அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மன்னிப்புக் கோரியுள்ளார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வின் போது வைக்கப் பட்டிருந்த சடலங்கள் தொடர்பான புகைப்படம் ஒன்றை சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட ரஞ்சன் ராமநாயக்க "மிகவும் வருத்தமாக உள்ளது. மன்னித்து விடுங்கள் மகனே, மகளே. உங்கள் மரணத்திற்கு நாங்களும் பொறுப்புக் கூற வேண்டும். ஒரு குழு மகிழ்ச்சியை அனுபவிக்க இன்னும் ஒரு குழுவினர் கடன் செலுத்த முடியாமல் உயிரிழக்கும் இந்த சமுதாய முறையை மாற்ற வேண்டும்" என ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார். அவரது பதிவை ஆயிரக்கணக்கானவர்கள் மீள் பதிவு செய்துள்ளனர். (உ)




## பதவி நீக்கப்பட்ட துலீப் எதிரணியில் இணைவு



கொழும்பு, ஒக்.31

பிரதியமைச்சுப் பதவியிலிருந்து விலக்கப் பட்ட துலிப் விஜேசேகர ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் இணைந்து கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார். புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை எதிர்த்து, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைய நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் அவர் பதவி நீக்கம் செய்யப்படுவதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்திருந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான துலிப் விஜேசேகர, பல்வேறு சர்ச்சைகளில் சிக்கி விமர்சனத்திற்குள்ளானதோடு, கடந்த காலங்களில் அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையில் கருத்து வெளியிட்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## மண்சரிவு எச்சரிக்கை

கேகாலை, ஒக்.31

கேகாலை மாவட்டத்தில் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று இவ் அறிவித்தலை விடுத்துள்ளது. கடந்த 24 மணித்தியாலங்களில் 100 மில்லிமீற்றருக்கு அதிகமாக மழைவீழ்ச்சி காணப்பட்டதினால் மேலும் மழை தொடருமாயின் மண்சரிவு , பாறை விழுகை , நிலவெட்டு சாய்வு, மற்றும் தரை உள்ளிறக்கம் என்பவற்றின் காரணமாக பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறும் தயார் நிலையில் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. கேகாலை அரனாயக்க பிரதேச செயலக பிரிவு சுற்றுப்புறங்களிலும் புளத்ஹேபிட்டிய பிரதேச செயலக பிரிவு சுற்றுப்புறங்களிலும் இந்த மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ)




## சித்த மருத்துவ மாணவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.31

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் அனுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 30 நாட்களுக்கும் மேலாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை நடத்திவரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்ற கோரியும், யாழ்.பல்கலைக் கழக சித்த மருத்துவ பீட மாணவர்கள் நேற்று யாழ்.கைதடி ஏ-9 வீதியில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். காலை 9 மணி தொடக்கம் சுமார் 2 மணி நேரம் மேற்படி கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது நல்லாட்சி அரசே தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய் என்ற கோஷங்களை எழுப்பியவாறும் கோஷங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறும் கவனயீர்ப்பு போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்ததுடன் வகுப்புக்களையும் புறக்கணித்திருந்தார்கள். (உ)

## ரஞ்சன் ராமநாயக்கவின் பதவி பறிப்பு



கொழும்பு, ஒக்.31

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் பதவியில் இருந்து நேற்று நீக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் திவுலபிட்டிய தொகுதி அமைப்பாளராக இதுவரை பதவி வகித்த பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தற்போது குறித்த பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், குறித்த வெற்றிடத்துக்கு முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கித்சிறி மஞ்சநாயக்கத் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

## தமிழ்த்தேசிய ஜனநாயகப் போராளிகள் புதிய கட்சி அங்குரார்ப்பணம்



கிளிநொச்சி, ஒக்.31

கிளிநொச்சியில் நேற்று புதிதாக தமிழ்த் தேசிய ஜனநாயகப் போராளிகள் என்ற கட்சி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கிளிநொச்சியில் உள்ள பாரதி தனியார் விடுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இரண்டு மாவீரர்களின் தாயொருவர் சுடரேற்றி வைக்க தொடர்ந்து அருட்தந்தை மற்றும் தமிழ்த்தேசிய ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் மற்றும் தலைவர் ஆகியோர் விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். ஏற்கனவே ஜனநாயகப் போராளிகள் கட்சி இயங்கி வருகின்ற நிலையில் இன்று புதிதாக தமிழ்த் தேசிய ஜனநாயகப் போராளிகள் கட்சி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் பல முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர் உறவினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (உ)

## வாகன மோசடி வழக்கிலிருந்து கருணா விடுவிப்பு

கொழும்பு, ஒக்.31

அரசாங்கத்துக்குச் சொந்தமான அதி சொகுசு வாகனத்தை முறைகேடாக பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட வழக்கிலிருந்து கருணா என அழைக்கப்படும், முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், விடுவிக்கப்பட்டுள்ளார். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பிரதி அமைச்சராக இருந்த வேளையில் ரூபா 9 கோடி பெறுமதியான, ஜனாதிபதி செயலகத்துக்குரிய வாகனத்தை பெற்று உரிய முறையில் கையளிக்காது முறைகேடாக பயன்படுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அது தொடர்பில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததோடு, கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில், நீதவான் லால் ரணசிங்க முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். (உ)

## பாடசாலையில் தீ விபத்து

நுவரேலியா, ஒக்.31

நுவரெலியா கந்தப்பளை கோட்லோஜ் தமிழ் வித்தியாலயத்தில் நேற்று மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்ட தீ விபத்தில் வித்தியாலயத்தின் ஆவணங்கள் வைக்கப்படும் களஞ்சிய அறை முற்றாக எரிவடைந்துள்ளது. இதனால் அறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த முக்கியமான ஆவணங்களும் பொருட்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை மத்திய மகாண சபை உறுப்பினர் ஆர்.இராஜாராம் நேரில் சென்று பார்வையிட்டு பாடசாலை நிர்வாகத்துடனும் கலந்துரையாடினார். நுவரெலியாக் கல்வி திணைக்களத்துடன் தொடர்பு கொண்ட அவர் இதனை திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள உத்தர விட்டுள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
செவ்வாய். 31 ஒக்ரோபர் 2017 ethirolijaffna@gmail.com

# மாவீரரோடு விளையாடாதீர்!

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதரைக் கடித்த கதையாக, தமிழ் அரசியல்வாதிகளின் சுயநல அரசியல் கடைசியாக எங்கு நுழையக்கூடாதோ அங்கு நுழைந்து விட்டது. இம்முறை மாவீரர் நாள் அரசியல் சாயம் பூசப்பட்டதாகவே இருக்கப்போவதை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுவரும் பணிக்குழுக்களையும் அதன் உறுப்பினர்களையும் அவதானிக்கும் போது, ஊகிக்க முடிகின்றது.

போருக்குப் பின்னர் மூச்சுவிடக் கூட அனுமதி பெறவேண்டிய சூழல் இருந்தபோது, இந்த அரசியல் தலைமைகள் இருந்த சுவடே தெரியாமல் ஒளிந்திருந்தார்கள். அப்போதைய இக்கட்டான நிலையைத் தீர்க்க ஒரு துரும்பைத்தானும் அசைக்கவில்லை. அப்படியிருந்த போதும், உயிரைப் பணயம் வைத்து ஒவ்வொரு வருடமும் யாழ்.பல்கலைக்கழகத்திலும், இன்னும் சில பிரத்தியேக இடங்களிலும் மாவீரர் நாள் அஞ்சலிப்புகள் நடக்கவே செய்தன. அவை யாவும் எந்தவொரு அரசியல் பின்புலமும் இல்லாமல் மக்களிடத்தே இயல்பாகக் கிளர்ந்த ஒரு உணர்வின் வெளிப்பாடாக அமைந்தவை. இதன்போதெல்லாம் அரசியல்வாதிகள் யாரும் மாவீரர் தீப மேற்றவோ, துயிலுமில்லங்களுக்குச் செல்லவோ முன்வரவில்லை. அப்படி வந்தால் அரசின் கோபத்துக்கு ஆளாகி, சிலவேளைகளில் சிறைவாசிகளாகியும் மாறக்கூடும் என்ற அச்சம் , அவர்களுக்கு மாவீரர் நாளையே மறக்கச் செய்திருந்தது.

எல்லாம் ஒரு நேர்சீருக்கு வரத்தொடங்கிய பின்னர் அரசியல்வாதிகளுக்கும் கொஞ்சம் துணிவு வந்துவிட்டது. அப்படித் துணிவு வந்தால் இன்னும் விடுவிக்கப்படாமல் இருக்கும் கேப்பாபிலவு, வலிகாமம் வடக்கு போன்ற பகுதிகளுக்குப் போய் படைத்தரப்புடன் முட்டி மோதி அதைவிடுவிக்க வேண்டியது தானே. ஆனால் அதைச் செய்யமாட்டார்கள்.போர்க் காலத்தில் எப்படிப் படைத்தரப்புக்கு அரசியல்வாதிகள் பயந்து பணிந்தார்களோ அதே பயத்தோடுதான் இப்போதும் இருக்கிறார்கள். ஆனால் அதை வெளிக்காட்டுவதில்லை. எனவே நேரடியாகப் படையினருடன் முட்டி மோதாமல், கைப்புள்ளை வடிவேலு போல, இளகிய இரும்பை ஓங்கியடித்து தங்கள் வீரதீரங்களைக் காட்ட முனைகிறார்கள். அப்படிக் காட்ட நினைத்தால் குட்டிச் சுவரோடு போய், முதுகைச் சொறிவதை விடுத்து எதற்காக மக்களின் உணர்வுகளோடு ஒன்றித்துப் போன மாவீரர் நாளோடு அரசியல்வாதிகள் விளையாடுகிறார்களோ தெரியவில்லை.

கடந்தவருடம் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் பெரும் எழுச்சியோடு மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. அதை முன்னின்று ஒரு அரசியல்வாதியே செய்திருந்தார். துணிச்சலோடு அவர் செய்த அந்த நிகழ்வின் புனிதம், கடைசியில் அவர் செய்த ஒரு காரியத்தால் கெட்டழிந்து போனது. மாவீரர் நாளின் பொதுச்சுடரை அந்த அரசியல்வாதியே மேடையேறி ஏற்றி வைத்ததுடன், புலிகளின் தலைவர் பிரபாகரன் ஈகைச்சுடருக்கு முன்னால் நிற்கும் அதேபாணியில் நின்றமை அங்கு வந்திருந்த பலருக்கும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது.

அதேபோன்று இன்னொரு அரசியல்வாதி நவம்பர் 27 ஆம் திகதி காலையில் இருந்து நடுச்சாமம் வரை யாழ்ப்பாணத்தில் உள்ள சந்திகள், நினைவிடங்கள், மாவீரர் துயிலுமில்ல வாசல்கள் என்று எல்லா இடங்களிலும் கற்பூரம் கொளுத்தியபடியே இருந்தார். மாவீரர் நாளை எப்படி, எங்கு, என்ன நேரத்தில் அனுஷ்டிப்பது, எப்போது சுடரேற்றுவது என்று திட்டவட்டமான விதிமுறைகள் ஏற்கனவே எழுதப்பட்டுள்ளன. அவை மக்கள் மனங்களில் ஆழமாகப் பதிந்தும் உள்ளன. எனவே நேரகாலம் இல்லாது அன்றைய நாள் முழுதும் காணுமிடமெல்லாம் கற்பூரம் கொளுத்துவது கூட மாவீரர் நாளின் புனிதத்தைக் கெடுத்துவிடும்.

எனவே அரசியல் வாதிகளே! மாவீரர் நாள் விடயங்களில் தலைபோடாமல் ஒதுங்கி இருங்கள். மக்களுக்குத் தெரியும் அதை எப்படிச் செய்யவேண்டும் என்று.ஏனெனில் இது அவர்களின் உணவுகளோடு கலந்துவிட்ட ஒரு நிகழ்வு. வேண்டுமானால் மாவீரர் நாளன்று மக்களோடு மக்களாகச் சென்று அஞ்சலி செலுத்துங்கள். அதைவிடுத்து மாவீரர் நாளையும் உங்கள் அரசியல்மேடையாக மாற்ற நினைத்தீர்களானால், மாவீரக் கனவுகள் அதன் புனிதத்தை இழக்கக் கூடும். மன்னாரில் எப்படி அரசியல் கலப்பற்ற மாவீரர் நாள் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளதோ அப்படியே எல்லா மாவட்டங்களிலும் அரசியல் நீக்கம் செய்யப்பட்ட குழுக்கள் மாவீரர் நாளை ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான், மண்னுக்குள் உறங்கும் மாணிக்கங்களின் சாவுக்கு ஒரு அர்த்தம் கிடைக்கும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

## வாந்தி எடுத்த மாணவியை

# வீட்டுக்கு அனுப்பிய அதிபரின் பதவி பறிப்பு

கொழும்பு, ஒக்.31

ஹெக்கிராவ கல்வி வலயத்தில் மடாட்டுகம றேவத்த என்ற வித்தியாலயத்தில் தரம் 10இல் கல்வி கற்ற மாணவி கர்ப்பிணி என்ற குற்றச்சாட்டில் வெளியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரை பதவியிலிருந்து இடைநிறுத்த தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த மாணவி பாடசாலையில் வாந்தி எடுத்ததையடுத்து பாடசாலை அதிபர் அவரைக் கர்ப்பிணி என பாடசாலையிலிருந்து வெளியேற்றியிருந்தார். இது தொடர்பான விசாரணைகளையடுத்தே அதிபர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை சம்பந்தப்பட்ட மாணவி தனது கல்வி நடவடிக்கையைத் தொடர மாகாணத்தில் பாடசாலை ஒன்று கிடைக்கவில்லையாயின் அதற்கான பொருத்தமான தேசியப் பாடசாலையொன்றை மாணவி மற்றும் அவரின் பெற்றோரின் விருப்பத்திற்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். பொருளாதார ரீதியில் இந்த மாணவி சிரமங்களை எதிர்கொள்வாராயின் அதற்கு தீர்வாக தங்குமிட வசதிகளுடன் கூடிய பாடசாலை தேவைப்படும் பட்சத்தில் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (உ)

# இதுதான் மகிந்தவின் நிலைப்பாடு!

கொழும்பு, ஒக்.31

"புதிய அரசியலமைப்புத் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொண்டுள்ள நிலைப்பாட்டையே, முன்னர் மகிந்த ராஜபக்சவும் கொண்டிருந்தார்" என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தின் போதே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு குறிப்பிட்டார்.

"புதிய அரசியலமைப்புத் தொடர்பாக இன்னமும்இறுதி முடிவொன்று எட்டப்படவில்லை. இது தொடர்பில் சிலர் தவறான கருத்துகளைத் தெரிவிப்பது கவலைக்குரிய விடயமாகும் .நாட்டின் ஐக்கியத்துக்கு எந்தப் பாதிப்பும் புதிய அரசியலமைப்பில் ஏற்படாது. அதற்கென சட்டபூர்வ ஏற்பாடுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நீண்டகால பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு அரசியலமைப்புத் திருத்தங்களை முன்வைத்துள்ளது. அதனால் எவரும் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை" என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.(அ)

# கஞ்சா நபர் சிக்கினார்

வவுனியா,ஒக்.31

வவுனியா - பஸ் நிலையத்தில் 4 கிலோ 96 கிராம் கேரளக் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவரை நேற்றுக் காலை 10.30 மணியளவில் வவுனியா போதைப் பொருள் ஒழிப்பு பிரிவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தம்புள்ள நோக்கிச் செல்லும் பஸ்ஸில் பயணித்த இளைஞர் ஒருவரின் செயற்பாட்டில் சந்தேகம் அடைந்த வவுனியா போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு பொலிஸார், வவுனியா பஸ் நிலையத்தில் வைத்து இந்த இளைஞனின் பையினைச் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது 4 கிலோ 96 கிராம் கேரளக் கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றினர்.மாத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ஆ)

# 753 பஸ் சேவை ஆரம்பம்




குஞ்சர்கடை, கரணவாய் ஊடாக மானிப்பாய், வட்டுக்கோட்டை வரை பஸ் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 753 ஆம் இலக்க பாதைகளின் ஊடாக இந்தப் போக்குவரத்து சேவை தொடர்ந்து நடைபெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# மக்களைத் திசைதிருப்ப அரசு முயல்கின்றது

கொழும்பு, ஒக்.31

புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை மீதான விவாதங்கள் நடைபெறவுள்ள நிலையில் மக்களை திசை திருப்பவே கள்ளுக்கான தடை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக எண்ணத் தோன்றுகின்றது எனக் குறிப்பிட்டிருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் இதனால் மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் வடக்கில் கள் இறக்கும் தொழில் செய்வோர் 50 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்படவுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

" கித்துள் மரத்துக்கு இல்லாததடை எதற்காக பனை தென்னை க்கு தடை விதிக்கப்பட்டது? இவ்வாறான தடையைக் கொண்டு வருவது தொடர்பில் மாகாண அமைச்சுடன் கலந்தலோசிக்கவில்லை. ஏன் அவ்வாறு கலந்தலோசிக்கவில்லை?

புகையிலையை தடை செய்யப்பட்டபோது அந்தத் தொழிலை நம்பி வாழ்ந்த பலருக்கு நஷ்டஈடு கொடுக்கவில்லை மாற்றுத் தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. அதே




போலவே தற்போது கள் இறக்க தடை எனும் வர்த்தமானி அறிவிப்பு வெளி வந்துள்ளது. இந்தத் தடையை நாம் முற்று முழுதாக எதிர்க்கின்றோம். இந்த தடையால் பாதிக்கப்படப் போகின்ற மக்களுக்குக்காக போராடுவோம்" - என்றார். (உ)

## இன்று நாளும் கோளும்

31.10.2017 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 14 ஆம் நாள்

ஏகாதசி பகல் 03.52 வரை | பூரட்டாதி மாலை 05.48 மணி வரை | மரணயோகம்

இராகுகாலம் 03.00 - 04.30 | சுபநேரம் 04.45 - 05.45 | எமகண்டம் 09.00 - 10.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாராட்டு | இரக்கம் | நன்மை | பகை | யோகம் | வரவு | நலம் | மேன்மை | சிந்தனை | கவனம் | பெருமை | பிரயாணம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. ஆட்சியிலேயே உரிமைகள் கிடைத்தன



கொழும்பு, ஒக்.31

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்திலே மலையக மக்கள் பல்வேறு உரிமைகளை பெற்று வந்துள்ளனர் எனக் கல்வி இராஜாங்க அமைச்சருமாகிய வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிமசிங்க தலைமையில் ஹட்டன் டன்பார் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காணி உறுதி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

"கடந்த தேர்தலின் போது தலவாக்கலையில் இம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் ரணில் விக்கிமசிங்க, மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளைத் தருகிறேன் ஆனால் 50 ஆயிரம் சாராயப் போத்தல்களைத் தரமாட்டேன் என்றார். அந்த வாக்குறுதி இன்று நனவாகியுள்ளது. கடந்த காலம் தொட்டு ஐ.தே.கவின் ஆட்சி காலத்திலேதான் மலையகத்திற்கு உரிமைகள் கிடைக்க பெற்றுள்ளன. அந்த வகையிலேயே இந்து கலாசார அமைச்சும் ஐக்கிய தேசிய கட்சியினால் உருவாக்கப்பட்டது" - என்றார். (உ)



## மரம் நடுகை

வடமராட்சி, ஒக்.31

கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் "பசுமை நிழலின்கீழ் வல்வை" மரம் நடுகை வேலைத்திட்டம் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது. கரவெட்டிப் பிரதேச செயலரின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டுள்ள குறித்த மரம் நடுகை வேலைத் திட்டத்தில் முதல்கட்டமாக 10 ஆயிரம் மரங்கள் நாட்டப்படவுள்ளன. (உ-11)

## பரிசளிப்பு விழா

கிளிநொச்சி, ஒக்.31

கிளி/சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 10.30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் நடராசா ராமதாஸ் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் திருஞானம் ஜோன்குயின்ரஸ் கலந்துகொள்ளவுள்ளார். (க)

## பிரசன்ன ரணவீரவுக்கு விளக்கமறியல் நீடிப்பு



கொழும்பு, ஒக்.31

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவிர உள்ளிட்டோரின் விளக்கமறியல், நவம்பர் மாதம் 13ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தடையுத்தரவை மீறி, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். பிரசன்ன ரணவீர எம்.பி, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுடன் கைதுசெய்யப்பட்டார். எனினும், நாமல் ராஜபக்ச பிணையில் விடுவிக்கப்பட்டார். நாமல் ராஜபக்சவுடன் கைதுசெய்யப்பட்ட ஏனையோர், இன்னும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (உ)

# நல்லாட்சியில் கல்விக்கே முன்னுரிமை




கரவெட்டி, ஒக்.31

கல்விக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசாங்கமாக சுதந்திர கட்சியின் தலைமையிலான நல்லாட்சி அரசு இருந்து வருவதாக வடக்கு மாகாண சபை உறுப்பினரும் அக்கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளருமான அகிலதாஸ் சிவக்கொழுந்து தெரிவித்துள்ளார்.

வீராணன் தோட்டம் கரணவாய் கரவெட்டியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் வைத்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் மற்றும் வாழ்வாதாரத் தேவையுடைய பெண்களுக்கான தையல் இயந்திரங்கள், நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் உரையாற்றிய அவர்,

வட மாகாணப் பாடசாலை மாணவர்களின் கல்வியில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான பல வழிகளை இந்த நல்லாட்சி அரசு ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றது.

ஜனாதிபதியின் வழியில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களும் தமிழ் மாணவர்களின் கல்விக்கான உதவிகளை தொடர்ந்தும் வழங்கி உதவுவோம்" - என்றார். (உ-11)

# '2017 – ரணவிரு சுவந்த' விருது



கொழும்பு, ஒக்.31

யுத்த வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் இலக்கிய மற்றும் கலைத் திறமைகளைப் பாராட்டும் வகையில் 'ரணவிரு சுவந்த' எனும் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

ரணவிரு சேவா அதிகாரசபையினால் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். இதன் போது ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவி திருமதி அனோமா பொன்சேகாவினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டதுடன், கௌரவ அதிதிகளினால் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (உ)

# எங்களைத் துலைக்கிறது நாங்கள்தான்!

போன ஞாயிற்றுக்கிழமை. காலை 10 மணிபோலை நல்லூரடியிலை உந்தயூனிவ சிற்றி சனாதனன், அகிலன் ஆக்களின்ரை இடத்திலை ஒரு கூட்டம். ஒராள் கொழும்பிலை இருந்து வந்து அதிலை பேசினவ. நானும் பாக்கப் போனன்.

'லாபத்துக்கு அப்பால்" எண்டது தலைப்பு. தங்கடை கொம்பனி செய்யிற யாவார நோக்கமில்லாத கலைச்சேவை எண்டதைப் பற்றித்தான் அந்த மனுசி கனக்கச் சொன்னவ.

அவா கொழும்பிலை இருக்கிற வா ஹோட்டல்கள் கனக்க வைச்சு நடத்திற ஒரு கொம்பனியிலை இருந்து வந்தவ. அவ பேசி முடிச்சாப்பிறகு கேள்வி கேட்கலாமெண்டு சொன்னா. அப்ப எங்கடை பெடி ஒண்டு எழும்பி ' நீங்கள் ஹோட்டல்கள் கனக்க வைச்சிருக்கிற பெரிய கொம்பனியிலை இருந்து வந்தனீங்கள். நீங்கள் நினைச்சா உங்கடை கொம்பனி ஆக்களிட்டைச் சொல்லி ஒரு ஹோட்டலை யாழ்ப்பாணத்திலை கட்டினால் கன ஆக்களுக்கு வேலை குடுக்கலாம் தானே? உங்கடை அபிப்பிராயம் என்ன" எண்டு ஒரு கேள்வியைக் கேட்டான்.

அவ சொன்னா 'ஹோட்டலிலை உள்ளூர் ஆக்கள் தங்கிறது குறைவு. வழமையாப் பிறத்தியார்தான் வந்து தங்குவினம். அப்பிடித் தங்கிறவை ஒண்டில் ஏதும் அலுவலா வரவேணும் அல்லது இஞ்சை எதாச்சையும் பாக்க வரவேணும். அதாவது 'யால" காட்டுக்குப் போறவை மிருகங்களைப் பாக்கப் போவினம். அவை அங்கை உள்ள ஹோட்டலிலை தங்குவினம். அது மாதிரி என்ன இஞ்சை பாக்கக் கிடக்கு? பிற தேசச் சனம் வந்து பாக்க எண்டு என்னத்தைச் செய்து வச்சிருக்கிறியள்?" எண்டு கேட்ட உடனை எனக்கு வேட்டி கீழாலை உரிஞ்சு விழுந்த மாதிரிக் கிடந்திது.

மனிசி கேட்ட பிறகுதான் நானும் ஓடி முழிச்சன். எங்களிட்டை எங்கடை எண்டு என்ன கிடக்கு. இப்ப இருக்கிற சமயம் தொடக்கம், கலை, கலாசாரம் பண்பாடு எண்டு எல்லாம் பிறத்தியாரிட்டைச் சுட்டது. எங்களிட்டை கிடந்த நல்லது எல்லாத்தையும் பிறத்தியாருக்குக் காட்டிக் குடுத்திட்டு,அவையை அதையெல்லாம் அள்ளிக்கொண்டு போகவிட்டிட்டு அவனிட்டைக் கிடந்த ஊத்தை எல்லாத்தையும் நாங்கள் பழகி வைச்சிருக்கிறம். அவ்வளவுதான்!

நேற்றைக்கு உந்த கே.கே.எஸ் றோட்டுக்குப் பக்கத்திலை ஒரு வீட்டிலை அவயின்ரை மூத்த பெடிக்கு ஐஞ்சாவது பேர்தேப் பாட்டி. ஏதோ கலியாண வீட்டுக்குப் போடுறமாதிரி பந்தல் போட்டுப் பெரிய பனை மரக் குத்தியளவு பாட்டுப்பெட்டி நாலு வைச்சு இரவு பகலா காது சவ்வு கிழியப் பாட்டைப் போட்டு (அயலை கிடக்க நிக்க விடாமல்) கொண்டாட்டம். ஐஞ்சாவது பேர்த்டே எண்டதாலை ஐஞ்சு கேக்கை வெட்டி வந்தவைக்கு மூண்டு நேரமும் மூக்குமுட்டக் குடியும் ஆட்டிறைச்சியோடை சாப்பாடும் குடுத்தவை. எங்களுக்கும் இப்பிடியான விசியத்துக்கும் என்ன தொடர்பு? சம்பந்தமில்லை எல்லே? உது வெள்ளைக்காரனிட்டை இருந்து சுட்ட பழக்கம் எல்லே?அவனைப் பாத்துப் பழகினது.

அதுதான் ஆறுதிருமுருகன் ஐயா பேசேக்கை ஒருக்கா சொன்னவர். 'விளக்கை ஏத்திக் கொண்டாடுறதுதான் சைவப் பழக்கம். விளக்கை ஊதி நூத்துக் கொண்டாடுற அமங்கல விளையாட்டு எங்கடை இல்லை. நாங்கள் இப்ப கேக்கை வெட்டிப்போட்டு மெழுகுதிரியை ஊதி நூத்தெல்லே கொண்டாட்டம். உது சரியோ? தயவு செய்து கேக்கை வேணுமெண்டால் வெட்டுங்கோ. விளக்கை ஊதி நூக்காதையுங்கோ. நாங்கள் செய்யிறது மட்டுமில்லாமல் எங்கடை வம்சத்துக்கும் அதைத்தானே பழக்கிக் கொண்டு வந்திட்டம்.

இவ்வளவையும் பிள்ளையளின்ரை சந்தோசத்துக்குச் செய்யிறம் எண்டெல்லே சொல்லுறியள்? அந்தப் பிள்ளையள் அதுகளின்ரை எதிர்காலத்திலை சந்தோசமாச் சீவிக்க எப்பவாவது அதுகளை இருத்திவைச்சு ஆத்திசூடி, கொன்றை வேந்தன் சொல்லிக் குடுத்தனியளே? இல்லாட்டிப் பொது இடங்களிலை போய் எப்பிடி நடந்து கொள்ளூறது எண்டு சொல்லித்தான் குடுத்திருக்கிறியளே? வடிவாக் கதைக்கப் பேசத்தான் காட்டிக் குடுத்திருக்கிறியளே? சிலதுகள் பள்ளிக்குடம் போகேக்கை கதைக்கிறதைக் காது குடுத்துக் கேக்க நாறும்.

ஒண்டும் இல்லை. நீங்களே உங்களைத் துலைக்கிறியள். அவ்வளவுதான். துலைச்சுப் போட்டு அவன் எங்களைத் துலைக்கிறான்... இவன் துலைக்கிறான் எண்டு கத்தாதையுங்கோ..என்ன? நாங்கள் முதுகெலும்புள்ள ஆக்களெண்டால் ஒருதரும் எங்களைத் துலைக்கேலாது. விளங்குதோ????

- வில்லங்கம் விநாசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில்மீது மோதியது வான்
# இருவர் பலி! 12 பேர் படுகாயம்!!

கொழும்பு, ஒக்.31

மீடியாகொட - தலுவதுமுல்லை ரயில் குறுக்கு வீதியில் இடம்பெற்ற விபத்தில் இரு பெண்கள் உயிரிழந்துள்ளதோடு, 12 பேர் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. தலுவதுமுல்லை ரயில் குறுக்கு வீதியின் வாயில் மூடப்பட்டிருந்த வேளை, வான் ஒன்று பாதுகாப்பற்ற முறையில், அதனை ஊடறுத்துச் செல்ல முற்பட்டுள்ளது. இதன்போது காலியில் இருந்து அளுத்கம நோக்கிச் சென்ற ரயில் குறித்த வானுடன் மோதியமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இதனையடுத்து, காயமடைந்த 14 பேர் பலபிடிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும், அதில் இரண்டு பெண்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். இதேவேளை, விபத்துடன் தொடர்புடைய வான் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, மீடியாகொட பொலிஸார் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## அந்த நாள் ஞாபகம்.....!



### 1984.10.31

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இரண்டு சீக்கியப் பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதன் பின்னர் புதுடில்லியில் இடம்பெற்ற கலவரத்தில் சுமார் 2000 சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

## ஜனநாயக மறுசீரமைப்புக்கு அமெரிக்கா நிதியுதவி

கொழும்பு, ஒக்.31

இலங்கையின் ஜனநாயக மறுசீரமைப்புப் பணிகளுக்காக அமெரிக்கா 14 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது. நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். நாடாளுமன்ற குழு முறையை முன்னேற்றுவதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனையோரின் ஆற்றலை விருத்தி செய்வதற்குமே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். நாடாளுமன்றச் செயற்பாடுகளை நிர்வகிக்கும் நிலையியல் கட்டளைகளை மீளாய்வு செய்தல் தொடர்பாக பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றும், சபாநாயகர் கரு ஜெயசூரிய குறிப்பிட்டுள்ளார். இதுபற்றி அமெரிக்காவில் இருந்த போதும் தாம் கலந்துரையாடல்களை நடத்தியதாகவும், ஏனைய நாடுகளுடனும் தான் சிறந்த உறவுகளைப் பேணி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## ஒரு கிராம் சீனிக்கு ஒரு ரூபா வரி



கொழும்பு, ஒக்.31

மென் பானங்களிலுள்ள சீனியின் அளவைக் குறைக்க புதிய வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். சீனி நுகர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மென் பான வகைகளில் 6 கிராமுக்கும் அதிக சீனி காணப்படுமாயின், மேலதிகமாகக் காணப்படும் ஒவ்வொரு கிராமுக்கும் ஒரு ரூபாய் வரி அறவிடவுள்ளதாக, அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதன்பொருட்டு உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி கிட்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அலரிமாளிகையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே, அமைச்சர் ராஜித சேனாரத்தன மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். அத்துடன், சுமார் 70 வீதமான உயிரிழப்புக்கள் தொற்றா நோய்கள் காரணமாகவே ஏற்படுவதாகவும், இதனைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## நீதிமன்றைச் சுற்றி விசேட அதிரடிப்படை

கொழும்பு, ஒக்.31

பலப்பிட்டிய நீதிமன்றத்துக்கு நேற்று விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரபல பாதாள உலகக்கும்பல் ஒன்றின் உறுப்பினர்கள் நேற்று வழக்கு விசாரணைக்காக பலப்பிட்டிய நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டனர். இதன்போது எந்தவொரு அசம்பாவிதமும் நடைபெறாத வகையில் பலப்பிட்டிய நீதிமன்றத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. விசேட அதிரடிப்படையினருடன், ஆயுதமேந்திய பொலிஸாரும் நீதிமன்றத்தைச் சுற்றிலும் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளதுடன், நீதிமன்றத்தை அண்மித்த பிரதேசங்களில் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். (உ)

## மகிந்தவுக்கு சிறப்பு கொமாண்டோ பாதுகாப்பு



மும்பை, ஒக்.31

மூன்று நாட்கள் பயணமாக இந்தியா சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு மகாராஷ்டிரா மாநில அரசின் சிறப்பு கொமாண்டோ பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிராவில் நடைபெற்ற பௌத்த கலாசார மாநாட்டில் பங்கேற்பதற்காக மகிந்த ராஜபக்ச கடந்த சனிக்கிழமை மும்பைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அவர் மும்பை விமான நிலையத்தில் தரையிறங்கியதும், கியூ.ஆர்.ரி எனப்படும் துரித பதிலடிக் குழு சிறப்புப் பாதுகாப்பை வழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. (உ)

## டிப்பர் மோதி இராணுவ வீரர் பலி

கந்தளாய், ஒக்.31

திருகோணமலை - கொழும்பு வீதியின் கந்தளாய் பேராற்றுவெளிப் பகுதியில் நேற்று டிப்பர் வாகனமொன்றும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரே இவ்வாறு பலியாகியுள்ளார். இவர் 30 வயதான இராணுவ வீரர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (உ)

## முதுமாணி பரீட்சை எழுதும் மரண தண்டனைக் கைதி

கொழும்பு, ஒக்.31

இலங்கை வரலாற்றிலே முதல் முறையாக மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவர், இந்த நாட்டின் பல்கலைக் கழகமொன்றில் முதுநிலை உயர் பட்டப் படிப்புத் தேர்வில் கலந்துகொள்ள உள்ளார். இந்த தேர்வு கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு நிலையமொன்றில் நடைபெறவுள்ளதாக, சிறைச்சாலையின் தலைமை அதிகாரி சந்தன எக்கநாயக்க ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். மரண தண்டனை விதிக்கப்பட்டு தற்போது சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அந்த சிறை கைதியின் பெயர் இந்திக பமுனுசிங்க. அவர் முன்னர் துணை பொலிஸ் பரிசோதகராகப் பணியாற்றியுள்ளார். கொழும்பு பம்பலப்பிட்டி பகுதியில் வசிக்கும் மொஹமட் ஷியாம் எனும் வியாபாரி ஒருவரைக் கடத்திச் சென்று கொலை செய்தததது தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டிருந்த இந்திக பமுனுசிங்கவுக்கு, கடந்த 2013 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியது. அந்த தண்டனையை எதிர்த்து அவர் தற்போது உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளார். மரண தண்டனை வழங்கப்பட்ட பின்னர் களனி பல்கலைக்கழகத்தில் அவர் முதலில் இளங்கலைப் பட்டத்தை பெற்றுக்கொண்டார். (உ)

## நல்லொழுக்க தின ஊர்வலம்



பருத்தித்துறை, ஒக்.31

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் நல்லொழுக்க தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. நல்லொழுக்க நிறுவனத்திலிருந்து ஆரம்பமான பேரணி பருத்தித்துறை நகரசபை மண்டபத்துக்கு வந்தது. அதன்போது பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆழ்வார்ப்பிள்ளை சில ஊர்வலத்தை வரவேற்று உரையாற்றினர். பின்னராக கரவெட்டிப் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்த ஊர்வலத்தை கரவெட்டிப் பிரதேச செயலர் ஸ்ரீமோகன் வரவேற்றார். தொடர்ந்து கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. (உ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்பத்தில் பொலனறுவை 50 ஆயிரம் பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக்.31

பொலனறுவை மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக 50,000 க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த மாவட்டத்தில் ஏழு பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய சுமார் 13,698 குடும்பங்களைச் சேர்ந்த 52,223 பேரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம் மக்கள் குடிநீரின்றி பெரும் அவலங்களை எதிர்நோக்குகின்றனர். இவர்களுக்குத் தேவையான குடிநீரை வழங்க அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெலிகந்த ,திம்புலாகல, லங்காபுர, மெதிரிகரிய, ஹிகுரன்கொட, தமன்கடுவ, மற்றும் ஹெலஹெர ஆகிய பிரதேச செயலகங்களுக்கு பவுஸர்கள் மூலம் நீர் விநியோகிக்கப்படுகிறது.

வறட்சியினால் வெலிகந்த , லங்காபுர, பிரதேசங்களைச் சேர்ந்த மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் குறித்த மாவட்டத்திலுள்ள அரச பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகள் ஆகியவற்றில் கல்வி பயிலும் சுமார் 9,000 மாணவர்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர். நாடளாவிய ரீதியில் பல இடங்களில் அதிகரித்த மழை வீழ்ச்சி காணப்படுகின்ற போதிலும், பொலனறுவையில் இன்னும் மழை பெய்யாமல் வறட்சி நீடிப்பதால்வெப்ப நோய்களாலும் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். (அ)

# துயிலுமில்லத்தில் சிரமதானம்



மாவீரர் தினத்தினை அனுஷ்டிக்கும் நோக்கில் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று முதல் சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.(ஆ)

# ஆசிரியருக்கு இடமாற்றம்: மாணவர்கள் போராட்டம்



வவுனியா, ஒக்.31

பாடசாலை ஆசிரியரின் இடமாற்றத்தைக் கண்டித்து வவுனியா - கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு போராட்டமொன்றை நேற்றுக்காலை 8 மணி முதல் நடத்தினர்.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் “கணித பாட ஆசிரியரின் இடமாற்றத்தினை தடை செய்”, “கல்வி எங்கள் எதிர்காலம் அதை சிதைக்காதே”, “கல்வி வலயமே பதில் கூறு” போன்ற கோசங்களை எழுப்பினர்.

இதன்போது, போராட்ட இடத்திற்கு வருகை தந்த வவுனியா வடக்கு கோட்டக்கல்வி அதிகாரி (ஓமந்தை) சசிகுமார் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் மற்றும் பெற்றோருடன் கலந்துரையாடினார்.இந்தநிலையில் குறித்த ஆசிரியரின் இடமாற்றத்தினை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்துள்ளார். இதனையடுத்து மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு தமது கற்றல் நடவடிக்கைகளை தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# நிறைவேற்றுப் பிரதமர் வேண்டவே வேண்டாம்!

கொழும்பு, ஒக்.31

“1994 க்குப் பின்னர் நடைபெற்ற அனைத்து ஜனாதிபதி த்தேர்தல்களின் போதும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதே பிரதான இலக்காக இருந்தது . ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவை அப்போது கைகூடவில்லை ” என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்ணாயக்க குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் இது தொடர்பில் நேற்று உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களின் காரணமாகவே நாடு பாதுகாப்பற்ற நிலைக்குச் சென்றது. கிளர்ச்சிகள் மற்றும் மோதல்கள் ஏற்பட்டது அது மட்டுமன்றி பயங்கரவாதம் ஏற்படுவதற்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையே காரணமாக அமைந்தது .

நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு பதிலாக நிறைவேற்றுப் பிரதமர் பதவி அவசியமில்லை . மாறாக நாடாளுமன்றத்தை வலுப்படுத்துவதே அவசியம்” என்று அவர் தெரிவித்தார். (ஆ)

## தொடர்ச்சிகள்

### அவர்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டக்ளஸ் தேவானந்தா எம்.பிதெரிவித்துள்ளார்.

தன்னைத் தாக்கிய குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கவேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை முன்னரும் வெளிப்படையாகத் தெரிவித்திருந்ததாகவும் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.(அ)

### சுமந்திரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்கின்றன. ஆயினும் அந்தவிடயங்கள் தொடர்பில் உடன்பாட்டினை அடைய, பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாம் தயார். புதிய அரசியல் யாப்பினைத் தயாரிக்கும் பொழுது பல விடயங்களில் பிரச்சினையாக இருந்தன. மகிந்த ராஜபக்ச கூட புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படும் என்று தேர்தல் காலத்தில் தெரிவித்திருந்தார். இந்தப் புதிய அரசியல் யாப்பு என்பது தேர்தலின்போது மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழியாகும். கடந்த தேர்தலில் வாக்களித்தோரில் 97 சதவீதத்திற்கு மேற்பட்ட வாக்காளர்கள் புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்காகவே வாக்களித்தனர்.

எனவே புதிய அரசியலமைப்பு வலுவற்றதெனவும், சட்டவிரோதமானது எனவும் சொல்வது தவறாகும்.

அப்படிச் சொல்வதில் எந்தவித அர்த்தமும் இல்லை. அனைத்து மக்களுக்கும் சமமான அந்தஸ்து வழங்கப்படவேண்டும். அனைத்து பிரஜைகளுக்கும் சமமாக மதிப்பளிப்பதே அரசியல் யாப்பு என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

பௌத்த மதத்துக்கு புதிய அரசமைப்பில் முக்கிய இடமளிப்பதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை” என்றும் எம்ஏ சுமந்திரன் இதன்போது தெரிவித்தார். (அ)

### டக்ளஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கில், 9 பேரை விடுவித்த நீதிமன்றம், ஏனைய 6 பேருக்கு பத்தரை வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கடந்த 1998 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதி, அப்போது அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா, களுத்துறைச் சிறைக்கு விஜயம் செய்திருந்தார். தம்மை விடுவிக்குமாறு கோரி, கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியபோதே அவரும் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தார். அப்போது அவரைக் கூரிய மற்றும் மழுங்கிய ஆயுதங்களால் தாக்கி கொலை செய்ய முயற்சிக்கப்பட்டது. இதில் டக்ளஸ் தேவானந்தா படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டார். இந்தக் கொலை முயற்சி உள்ளிட்ட 3 குற்றச்சாட்டுகள் தொடர்பில், சட்ட மாஅதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு கொழும்பு உயர் நீதிமன்றினால் நேற்று வழங்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் 15 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.அந்தப் 16 பேரில் விடுதலைப் புலிகள் அமைப்பின் நிதிப் பிரிவில் செயற்பட்ட அன்ரன் எமில் லக்ஷ்மி காந்தன் உள்ளிட்ட 9 பேர் நிரபராதிகள் என இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.ஏனைய 6 பேருக்கும் பத்தரை வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன கமகே தீர்ப்பளித்துள்ளார்.

இந்த வழக்கில் பொன்னுசாமி ஸ்ரீ ஸ்கந்தராஜா என்ற சந்தேகநபர் மட்டுமே இதுவரை ஆஜராகியிருந்தார். எமில் காந்தன் உள்ளிட்ட ஏனைய 14 பேரும் இல்லாதநிலையிலேயே குறித்த வழக்கு விசாரணைகள் நடைபெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

### யாழ். நீதிபதிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு கௌரவித்ததாக அறிவிக்கப்பட்டது.

கண்டி பல்லேகலயில் உள்ள மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்தச் சங்க சபாவின் 14 ஆவது வருடாந்த மாநாட்டிலே , அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் ரிய வரக்காகொட ஸ்ரீ ஞானரதன தேரர் இவர்களுக்கான கௌரவிப்பையும், விருதையும் வழங்கி வைத்தார். 56 நாடுகளின் மகாநாயக்கர்கள், பிக்குகள், பௌத்த தூதுவர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.(ஆ)

### புளொட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு திட்டவட்டமாகக் கூறினார்.

“ கூட்டமைப்பில் இணைந்துள்ள கட்சிகளில் புளொட் முக்கியமான கட்சி. ஆனால் நாங்கள் எப்போதும் கூட்டமைப்பில் இருந்து வெளியேறும் எண்ணத்துடன் செயற்பட்டதில்லை. இனியும் நாங்கள் கூட்டமைப்பை விட்டு தனித்துச் செயற்படப் போவதில்லை” என்றும் அவர் கூறினார். (அ)

### பூட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கதவுகள் இழுத்து மூடப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

“சிறைச்சாலைகளில் பல வருடங்களாக எந்த விதமான விசாரணையும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உடன் விடுதலை செய்யப்படல் வேண்டும். உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளின் நியாயபூர்வமான கோரிக்கைகளை செவிசாய்த்து உடன் தீர்வு காணப்படல் வேண்டும் , சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் அவல நிலை உணர்ந்து பொறுப்புக் கூற வேண்டிய தமிழ் அரசியல் தலைமைகள், அசமந்தப் போக்கினைக் கைவிட்டு உரிய தரப்பிடம் அழுத்தங்கைப் பிரயோகித்து கைதிகளின் விடுதலை விடயத்தில் பொறுப்புக் கூறல் வேண்டும்” ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக் கழக சமூகத்தினால் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### மீறுகிறார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவெடுக்க வேண்டும் என்று இரா. சம்பந்தன் கைவிரித்துள்ளார்.

இதற்குக் கண்டனம் தெரிவித்தே நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

“இது வரைகாலமும் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு நாடாளுமன்றக் குழுவில் முடிவெடுப்பதில்லை. இம்முறை எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு அறிவித்துள்ளமையானது எமக்கு அதிர்ச்சியளிக்கிறது. நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பின் சார்பாகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியையும் சேர்த்து நான்கு கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

இடைக்கால அறிக்கை தொடர்பில் எமது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்காகவே நாம் நேரம் ஒதுக்கித்தருமாறு வேண்டினோம். ஆனால் எமது கருத்து ஏற்கப்படவில்லை.

வன்னி உட்பட வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காகவும் அதன் ஒற்றுமையைக் கட்டிக்காப்பதற்காகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அளப்பரிய பங்காற்றியுள்ளது.கூட்டமைப்புக்கு வெளியில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளையும் இதில் இணைத்துக் கொள்வதிலும் அது தனது காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தது.

மேற்கண்ட எமது செயற்பாடுகளை அங்கீகரிக்கும் வகையிலும் எமது மக்கள் வழங்கிய ஆணையிலிருந்து விலகாமலும் அவர்களுக்கு என்னால் முடிந்த சேவைகளை ஆற்றி வருவதினாலுமே வன்னி மக்களின் பூரண ஆதரவுடன் தொடர்ந்தும் நான்குமுறை நான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு வந்திருக்கிறேன்.

அவர்களின் கருத்துக்களையும் எமது கட்சியின் நிலைப்பாட்டையும் தெரிவிப்பது எமது உரிமையும் கடமையுமாகும். எமது அந்த ஜனநாயகக் கடமையைச் செய்ய விடாமல் தடுப்பது எமது அடிப்படை உரிமையை மீறுவதாகும்.

மேலும் எமது மக்களை அவமதிக்கின்ற செயலாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம். எதிர்க்கட்சித் தலைவரின் இந்தச் செயலானது தமிழரசுக் கட்சியின் அராஜகப் போக்கையும் அதன் எதேச்சாதிகாரப் போக்கையும் நிரூபிப்பதாகவே அமைந்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவரின் இச்செயலானது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை மீறுவதாகவும் அமைந்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவரின் கருத்தை நாம் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம். சபாநாயகர் ஜனநாயகத்தை நிலைநாட்டி எமக்கான உரிமையை வழங்குவார் என்று எதிர்பார்க்கின்றோம். அத்துடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இத்தகைய அராஜகப் போக்கை வன்மையாகக் கண்டிக்கின்றோம் ” என அந்த அறிக்கையில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவித்துள்ளார்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli





# கருணாநிதி - அழகிரி நேற்றுத் திடீர் சந்திப்பு


சென்னை, ஒக்.31

நீண்ட காலத்துக்குப் பின்னர் கருணாநிதியின் மூத்த மகன் அழகிரி கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்துள்ளார்.

கருணாநிதிக்குப் பின்னான திமுகவின் தலைமையைக் கைப்பற்றும் போட்டியில் கருணாநிதியின் மகன்களான அழகிரியும், மு.க.ஸ்டாலினும் மோதிக்கொண்டனர். இதனால் ஏற்பட்ட மனக்கசப்புக் காரணமாக கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் இருந்து அழகிரி விலகியிருந்தார். இந்நிலையில் நடிகர் விக்ரம்-சைலஜா தம்பதியின் மகள் அக்ஷிதாவுக்கும், தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மகன் மு.க. முத்து- சிவகாம சுந்தரியின் மகள் வழிப்பேரன் மனோரஞ்சித்துக்கும் சென்னை கோபாலபுரத்தில் உள்ள தி.மு.க. தலைவர் கருணாநிதியின் வீட்டில் நேற்று திருமணம் நடைபெற்றது. திருமணத்தில் கருணாநிதி மற்றும் நடிகர் விக்ரம் குடும்பத்தினர் மட்டுமே கலந்து கொண்டனர். இந்தத் திருமண விழாவுக்காக வந்திருந்த முன்னாள் மத்திய மந்திரி மு.க அழகிரி கருணாநிதியை சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தார்.

மு.க.அழகிரியுடன் அவரது மகன் தயாநிதி அழகிரியும் கருணாநிதியைச் சந்தித்து பேசினார். (உ)

# கமல் மீது வழக்கு இல்லை



சென்னை, ஒக்.31

கமலின் ருவிட்டர் கணக்குத் தொடர்பில் வழக்குப் பதிவு செய்ய முகாந்திரம் இல்லை என பொலிஸார் சென்னை உயர்நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். நிலவேம்பு குடிநீர் தொடர்பாக ருவிட்டரில் கடந்த 18ஆம் திகதி நடிகர் கமல்ஹாசன் கருத்துத் தெரிவித்திருந்தார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தேவராஜன் என்பவர் மனு அளித்திருந்தார். குறித்த மனு தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை எனக் கூறப்பட்டது. அந்த மனு மீது பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி சென்னை உயர் நீதிமன்றத்திலும் அவர் முறையிட்டார். இதுகுறித்து விசாரித்து உரிய முடிவெடுக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியது. நிலவேம்பு தொடர்பான கமலின் கருத்துத் தொடர்பாக அவர் மீது வழக்குப் பதிவு செய்யலாமா என்பது குறித்து சென்னை சைபர் கிரைம் பொலிஸார் அரசு வழக்கறிஞர்கள், சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை மேற்கொண்டனர். இந்த விவகாரம் தொடர்பாக நடிகர் கமல் மீது வழக்குப் பதிய முகாந்திரம் இல்லை என்று கூறி தேவராஜன் அளித்த மனுவை சென்னை பொலிஸார் முடித்து வைத்தனர். (உ)

# தீவிரவாதிகள் பட்டியலில் குட்டி இளவரசன்



லண்டன், ஒக்.31

ஐ.எஸ். தீவிரவாதிகளின் கொலை பட்டியலில் இங்கிலாந்து பட்டத்து இளவரசர் பிரின்ஸ் வில்லியம்- கேத் மிடில்டன் தம்பதியரின் மகனான ஜோர்ஜ் பெயர் இடம்பெற்றிருப்பதாக இங்கிலாந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களின் தகவல்களை எலக்ட்ரோனிக் சாதனங்கள் மூலம் பரிமாற்றம் செய்தால் அதை உளவுத்துறையினர் கண்டுபிடித்து விடுவார்கள் எனக் கருதி பழைய காலத் தந்தி முறைகளை இப்போது கையாள்கிறார்கள். இவ்வாறு தந்தி முறையில் அரபு மொழியில் அனுப்பப்பட்ட தகவலை உளவுத்துறையினர் கண்டு பிடித்துள்ளனர். அதில் போர் தொடங்கினால் துப்பாக்கிக் குண்டுகளின் இசையைக் கேட்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருப்பதுடன் ஜோர்ஜ் பெயரையும் குறிப்பிட்டு தகவல்களை பரிமாறி உள்ளனர். எனவே அவர்களுடைய கொலைப் பட்டியலில் ஜோர்ஜ் இருக்க வேண்டும் என்று இங்கிலாந்து உளவுத்துறை கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜோர்ஜ் படித்து வரும் பள்ளி அருகே சமீபத்தில் வீடியோ எடுத்த பெண் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். இதைத்தொடர்ந்து அந்த பள்ளிக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# அமலாபாலுக்கு 7 வருடச் சிறை ?



சென்னை,ஒக்.31

முன்னணி நடிகையான அமலா பால் போலியான முகவரி கொடுத்து, பென்ஸ் கார் வாங்கிய விவகாரத்தில், அவர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் 7 ஆண்டு சிறைத் தண்டனை கிடைக்கும் என தெரிவிக்கப்படுகிறது. அவர் புதுச்சேரியில் போலி முகவரி கொடுத்து ரூ. 1.12 கோடி மதிப்புள்ள எஸ்.கிளாஸ் பென்ஸ் கார் வாங்கினார்.வரி குறையும் என்பதற்காக இந்தக் காரைப் புதுச்சேரியில் போலி முகவரி மூலம் பதிவு செய்துள்ளார். இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கலாம் எனத் தகவல் தெரிவிக்கின்றன. (க)

# ஒட்டிய குழந்தைகள் வெட்டிப் பிரிப்பு





தலையொட்டி பிறந்து, அறுவை சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்ட இரட்டை ஆண்குழந்தைகளில், ஒரு குழந்தை அறுவை சிகிச்சை முடிந்த நான்கு நாட்களுக்குப் பிறகு கண் திறந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இரண்டு வயதாகும்ஜகா, கைகளை அசைக்குமாறு கூறிய போது, அதைச் செய்துள்ளார். சுவாசக்குழாய் உதவியுடனேயே இன்னும் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சிறுநீரக பிரச்சினை உள்ளதால், அவருக்குத் தினமும் டையாலிஸிஸ் செய்ய வேண்டிய தேவை உள்ளது. அவரின் சகோதரரான கலியா இன்னும் சுயநினைவை அடையவில்லை. மேலும், அவர் வலிப்புகளாலும் அவதிப்பட்டார். பகிர்ந்துகொள்ளப்பட்ட இரத்தக் குழாய்கள் மற்றும் மூளைத்திசுக்களுடன் பிறந்த இந்த இரட்டைக் குழந்தைகள் 16 மணிநேர சிகிச்சைக்குப் பிறகு பிரிக்கப்பட்டனர். இந்தியாவில் இதற்கு முன்பு நடந்திராத இத்தகைய அறுவை சிகிச்சை, டெல்லி அரசு மருத்துவமனையில், 30 பேர் கொண்ட மருத்துவக் குழுவால் நடத்தப்பட்டது. இரு குழந்தைகளின் உடல் நிலையும் சீராக இருப்பதாகவும், அவர்களின் முன்னேற்றம் மருத்துவர்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் உள்ளது என்றும், அந்த அறுவை சிகிச்சையில் பங்கேற்ற பேராசிரியர் தீபக் குப்தா தெரிவித்துள்ளார். கரானியோபகஸ் என்று அழைக்கப்படும், 'தலையொட்டி பிறக்கும்' நிலை என்பது முப்பது லட்சம் குழந்தைகளில் ஒருவருக்கு ஏற்படக்கூடியது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# வங்கப் பிரதமர் கொலை முயற்சி: 11 பேருக்கு 20 ஆண்டுச் சிறை



டாக்கா, ஒக்.21

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினாவை படுகொலை செய்யத் திட்டம் தீட்டியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 11 பேருக்கு 20 ஆண்டுச் சிறை தண்டனை மற்றும் தலா 20 ஆயிரம் டாகா அபராதம் விதித்து டாக்கா நகர நான்காவது கூடுதல் நீதிமன்ற நீதிபதி முஹம்மது ஸாஹிதுல் கபிர் நேற்று தீர்ப்பளித்துள்ளார். ஷேக் ஹசினாவை கொல்ல 19 முறை தீட்டப்பட்ட சதித் திட்டங்கள் சரியான நேரத்தில் முறியடிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அவ்வகையில், கடந்த 11-8-1989 அன்று ஷேக் ஹசினாவின் பூர்வீக வீட்டுக்கு வந்த சில மர்ம நபர்கள் அவர் வீட்டில் இருந்த வேளையில் காவலர்களையும் மீறி வீட்டின்மீது வெடி குண்டுகளை வீசிவிட்டு தப்பிச் சென்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த 1997ஆம் ஆண்டு இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 2009ஆம் ஆண்டில் பங்களாதேஷ் விடுதலைக் கட்சியை சேர்ந்த 16 பேர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு டாக்காவில் உள்ள நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது.

முன்னதாக, ஷேக் ஹசினாவைக் கொல்ல முயன்ற மற்றொரு வழக்கில் கடந்த ஆகஸ்ட் மாதம் 10 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது, நினைவிருக்கலாம். (உ)

# பாகிஸ்தான் இந்துக்களை அரவணைக்கும் மோடி அரசு

பாகிஸ்தான்,ஒக்.31

பாகிஸ்தானைச் சேர்ந்த 431 இந்துக்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் நீண்ட கால விசாவை வழங்கியுள்ளது. பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தானில் மதரீதியாகத் துன்புறுத்தப்படும் சிறுபான்மையினருக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு ஆதரவுக்கரம் நீட்டி வருகிறது. அந்த வகையில் பாகிஸ்தானைச் சேர்ந்த 431 இந்துக்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த மாதம் நீண்ட கால விசாவை வழங்கியுள்ளது. இதன் மூலம் அவர்கள் இந்தியாவின் பான் எண், ஆதார் எண் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர். மேலும் ரிசர்வ் வங்கியின் அனுமதியின்றி வங்கிகளில் சேமிப்புக் கணக்குத் தொடங்க முடியும். இவை மட்டுமன்றி இந்தியாவில் சொத்துகள் வாங்கவும் சட்டபூர்வமாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli

# விசேட அதிரடிப்படையினர் இருவர் விபத்தில் பலி!

காலி, ஒக்.31

காலி - அம்பலாங்கொடை பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் விசேட அதிரடிப்படையினர் இருவர் உயிரிழந்துள்ளனர்.

புகையிரதமொன்றுடன் காரொன்று மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் ஒருவரின் மனைவி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விடுமுறையைக் கழிக்க விசேட அதிரடிப்படை வீரர்கள் இருவரும் காரில் சென்றுகொண்டிருந்த போதே இந்த விபத்து நேர்ந்துள்ளது. (ஆ)

# அதுவேற... இது வேற.....




# மகிந்த அணி எதிர்ப்பு

கொழும்பு, ஒக்.31

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தை அரசு நேற்று அரசமைப்பு நிர்ணய சபையில் நடத்தியபோது, நாடாளுமன்றுக்கு வெளியே ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இடைக்கால அறிக்கை மீதான விவாதத்தைக் குழப்பியடிக்கும் வகையில் நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியேயும் மகிந்த அணியான பொது எதிரணியினர் கறுப்புக் கொடி கட்டியும், கூச்சலிட்டும் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளால் நாடாளுமன்ற வளாகத்திலும், நாடாளுமன்றத்துக்குள்ளும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# மாவீரர் நாள் குழு கிளி.யில் சலசலப்பு



கிளிநொச்சி, ஒக்.31

மாவீரர் நாள் நிகழ்வுகளை அனுஷ்டிக்க தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளையின் தலைமையில் கிளிநொச்சியில் மாவீரர் நாள் பணிக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சியின் முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் குமாரசிங்கம் செயலாளராகவும், மற்றும் கட்சியின் பிரதேச மற்றும் கிராம மட்ட அமைப்பாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு இந்தப் பணிக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 27 ஆம் திகதி கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் நாளை அனுஷ்டிப்பது தொடர்பில் பொது அறிவித்தல் எதுவும் இன்றி இந்தப் பணிக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் விசனம் வெளியிட்டிருந்தனர். இந்த நிலையில் குறித்த பணிக்குழுவின் ஊடகவியலாளர் சந்திப்பு கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளையின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

"கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு , மூன்று மாவீரர்களை கொண்ட குடும்பங்களும் அவர்களது உறவினர்களும் உள்ள போது தாங்கள் எவ்வாறு இந்தப் பணிக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டீர்கள், அதற்கான என்ன தகுதி தங்களிடம் உண்டு, தாங்கள் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவரா?" என ஊடகவியலாளர் ஒருவர் வினவினார்.

அதற்கு " நான் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்ல. ஆனால் எனது மனச்சாட்சியின் படி தலைவராக இருப்பதற்குத் தகுதியுண்டு, அது என்ன தகுதி என்று இங்கு குறிப்பிட முடியாது " என்று மழுப்பலாகச் சொன்னார் மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை.

இதேவேளை குறித்த பணிக்குழு முற்றுமுழுதாக தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களாலேயே அமைக்கப்பட்டுள்ளது எனவும் , இம்முறையும் மாவீரர் நாளை அரசியல் நடவடிக்கையால் அதன் புனிதத்தைக் கெடுக்க முனைவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.(அ)

# மன்னார் மாவீரர் நாளில் அரசியல் கட்சிகள் 'அவுட்!'

மன்னார், ஒக்.31

மாவீரர் தினத்தை முன்னிட்டு மன்னார்ப் பகுதியில் அரசியல் உள்ளீடு இல்லாமல் மாவீரர்களுக்கு அனுஷ்டானம் செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க ஏற்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ஆடகாட்டிவெளி, பெரிய பண்டிவிரிச்சான் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் நினைவு அனுஷ்டானங்களை மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவீரர்களின் பெற்றோர் , உறவினர்கள், முன்னாள் போராளிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை ஒருங்கிணைக்கும் நடவடிக்கையை செயற்பாட்டுக் குழு மேற்கொண்டுள்ளது.

அத்துடன் இம் முறை எந்த அரசியல் கட்சினரையும் மாவீரர் நாள் செயற்பாட்டுக் குழுவில் சேர்ப்பதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)




உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்
மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி
கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி
Ethiroli
021 3004848
நிபந்தனை களுக்குட்பட்டது

# பவுஸரை முட்டிய பஸ் 24 பேர் படுகாயம்



வவுனியா, ஒக்.31

வவுனியா, ஓமந்தையில் பவுஸரோடு , பஸ்ஸொன்று மோதியதில் 24 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. ஓமந்தைப் பகுதியிலிருந்து வவுனியாவிலுள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு பணியாளர்களை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்றும், பால் கொள்வனவுக்காகச் சென்ற பவுஸர் ரக வாகனம் ஒன்றுமே விபத்திற்குள்ளாகின.

ஓமந்தை பணிக்கர்நீராவியடிப் பகுதியில் இருந்து வவுனியா இராசேந்திரன்குளம் பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலைக்குப் பணியாளர்களை ஏற்றிச்சென்ற போதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இதன்போது, ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் பணியாளர்கள் 24 பேர் படுகாயமடைந்தனர். வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களில், சிலருக்கு அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்படுகின்றது. இவ் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 31.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.